

திருச்சியில் பா.ஜ.க. ஒன்றிய அரசைக் கண்டித்து மத்திய மாவட்ட தி.மு.க. சார்பில் நடைபெற்ற கண்டன பொதுக்கூட்டத்தில் சிறப்பு பேச்சாளர் துணைப் பொதுச் செயலாளர் ஆ.ராசா எம்.பி. கழக முதன்மைச் செயலாளரும் நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சருமான கே என் நேரு முன்னிலையில் உரையாற்றினார். கூட்டத்தில் மாவட்டச் செயலாளர் வைரமணி, மாநகர செயலாளர் மேயர் அன்பழகன், எம்.எல்.ஏ.க்கள் சவுந்தரபாண்டியன், பழனியாண்டி மற்றும் கழக நிர்வாகிகள் பேரூர் தர்மலிங்கம், மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் ஆனந்த், டோல்கேட் சுப்பிரமணி, மாவட்ட துணைச் செயலாளர் முத்து, செல்வம், விஜயா, ஜெயராஜ், கருணாநிதி, காஜாமலை விஜய், செவந்தி லிங்கம், மோகன்தாஸ், ராம்குமார், கமால் முஸ்தபா, கனகராஜ், பவுல்ராஜ், புத்தூர் தர்மராஜ், ஜான்சன், குமார், விஜயலட்சுமி, கண்ணன், துர்கா தேவி, எஸ்.வி.ஆர்.வரதராஜன் கருணாமூர்த்தி, ராதாகிருஷ்ணன், முத்து, பழனி உள்பட கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

### பௌர்ணமி நாளை முன்னிட்டு,

# திருவக்கரை வக்ரகாளியம்மன் திருக்கோயிலில் வழிபாடு!

## 108 பெண்கள் பங்கேற்றனர்!

சென்னை, பிப். 13-

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலின்படி, 2024 - 2025 ஆம் ஆண்டிற்கான இந்து சமய அறநிலையத் துறை சட்டமன்ற அறிவிப்பினை நிறைவேற்றும் வகையில் பௌர்ணமி தினத்தை முன்னிட்டு, நேற்று முன்தினம் (11.02.2025) விழுப்புரம் மாவட்டம், திருவக்கரை வக்ரகாளியம்மன் திருக்கோயிலில் நடைபெற்ற 108 பெண்கள் பங்கேற்ற திருவிளக்கு வழிபாட்டினை வானூர் ஒன்றியக்குழுத் தலைவர் பி. கே.டி. உஷா முரளி தொடங்கி வைத்தார்.

இந்து சமய அறநிலையத் துறையானது தனது நிர்வாகக் கட்டுப்பாட்டிலுள்ள திருக்கோயில்களில் திருப்பணிகள் மேற்கொண்டு குடமுழுக்குகள் நடத்துதல், பக்தர்களுக்குத் தேவையான அடிப்படை வசதிகளை மேம்படுத்துதல், திருக்கோயிலுக்கு சொந்தமான சொத்துக்களை ஆக்கிரமிப்பாளர்களிடமிருந்து மீட்டெடுத்தல் போன்ற பல்வேறு பணிகளை சீரிய முறையில் மேற்கொண்டு வருகிறது. மேலும், சட்டமன்றத்தில் வெளியிடப்பட்ட அறிவிப்புகளையும் தொடர்ந்து நிறைவேற்றி வருகிறது.

முதலமைச்சர் அவர்கள் தலைமையிலான அரசு பொறுப்பேற்ற பின், சட்டமன்ற அறிவிப்பின்படி 2022 - 23 ஆம் நிதியாண்டில் 12 பிரசித்திபெற்ற அம்மன் திருக்கோயில்களிலும், 2023 - 24 ஆம் நிதியாண்டில் 5 பிரசித்திபெற்ற அம்மன் திருக்கோயில்களிலும் பௌர்ணமி தின திருவிளக்கு வழிபாடு தொடங்கப்பட்டு இதுவரை 17 திருக்கோயில்களில் சிறப்பாக நடத்தப்பட்டு வருகிறது. திருவிளக்கு வழிபாட்டில் கலந்துகொள்ளும் பெண் பக்தர்களுக்கு பித்தளை காமாட்சி அம்மன் விளக்கு, புடவை, ஜாக்கெட், குங்குமச்சிமிழ் உட்பட 23 பொருட்கள் வழங்கப்படுகின்றன.

இதற்கு ஆகும் மொத்த செலவினத் தொகையான ரூ. 800-ல் நான்கில் ஒரு பங்கான ரூ.200/- மட்டுமே பெண் பக்தர்களிடமிருந்து கட்டணமாக பெறப்படுகிறது. இத்திட்டத்தின் மூலம் மூலம் இதுவரை 54,540 பெண் பக்தர்கள் பயன் பெற்றுள்ளனர்.

2024 - 2025 ஆம் நிதியாண்டிற்கான இந்து சமய அறநிலையத்துறை சட்டமன்ற அறிவிப்பில், “ விழுப்புரம் மாவட்டம், திருவக்கரை, வக்ரகாளியம்மன் திருக்கோயில், கோயம்புத்தூர் மாவட்டம், கோயம்புத்தூர், கோணியம்மன் திருக்கோயில், சேலம் மாவட்டம், சேலம், கோட்டை மாரியம்மன் திருக்கோயில் ஆகிய 3 திருக்கோயில்களில் இந்தாண்டு முதல் மாதந்தோறும் பௌர்ணமி நாளன்று திருவிளக்கு வழிபாடு நடத்தப்படும் “ என அறிவிக்கப்பட்டது.

அந்த அறிவிப்பினை நிறைவேற்றிடும் வகையில் 11.02.2025 அன்று பௌர்ணமி தினத்தை முன்னிட்டு, திருவக்கரை வக்ரகாளியம்மன் திருக்கோயிலில் 108 திருவிளக்கு வழிபாட்டினை வானூர் ஒன்றியக்குழுத் தலைவர் திருமதி பி.கே.டி. உஷா முரளி அவர்கள் தொடங்கி வைத்தார்.

இந்நிகழ்ச்சியில் இந்து சமய அறநிலையத்துறை விழுப்புரம் மண்டல இணை ஆணையர் சு.மோகனசுந்தரம், துணை ஆணையர் த.சிவலிங்கம், உதவி ஆணையர்கள் மூ.சக்திவேல், இ.ஜீவானந்தம், மாவட்ட அறங்காவலர் குழு உறுப்பினர் டி.குப்பன், ஒன்றியக்குழு உறுப்பினர் பி. முருகன், ஊராட்சி மன்றத் தலைவர் ஆர். மோகனா, துணைத் தலைவர் தனலெட்சுமி சிவா, திருக்கோயில் செயல் அலுவலர் பி.ஜெயக்குமார், ஆய்வர் உமாமகேஸ்வரி மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# சேலம் மத்திய மாவட்டக் கழக பொது உறுப்பினர்கள் கூட்டம்!

## மாவட்டச் செயலாளர் - அமைச்சர் இரா.இராஜேந்திரன் அறிக்கை!



சேலம், பிப். 13-

சேலம் மத்திய மாவட்டக் கழகச் செயலாளர் - அமைச்சர் இரா.இராஜேந்திரன் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

சேலம் மத்திய மாவட்டக் கழக பொது உறுப்பினர்கள் கூட்டம் நாளை (14.02.2025 வெள்ளிக்கிழமை) காலை 10.30 மணிக்கு மாவட்டக் கழக அவைத்தலைவர் ஜி.கே. சுபாசு தலைமையில் மாவட்டக் கழக அலுவலகமான “கலைஞர் மாளிகை“யில் நடைபெறவுள்ளது. இக்கூட்டத்தில் மாவட்டக் கழக, மாநகரக் கழக நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், ஒன்றிய கழக, பகுதிக் கழக, பேரூர் கழக நிர்வாகிகள், கழக முன்னோடிகள், மாவட்டக் கழக பிரதிநிதிகள், மாநகர வட்டக்கழக செயலாளர்கள், ஊராட்சி கிளைக் கழகச் செயலாளர்கள், பேரூர் வார்டு கழகச் செயலாளர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள் மற்றும் அனைத்து அணிகளைச் சேர்ந்த மாவட்ட, மாநகர, ஒன்றிய, பகுதி, பேரூர் அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள் என அனைவரும் தவறாமல் கலந்துகொள்ள வேண்டுமென கேட்டுக்கொள்கிறேன்.

பொருள் : கழகத் தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர்

அவர்களின் பிறந்தநாள் விழா.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

# வார இறுதி நாட்களில் சிறப்புப் பேருந்துகள் இயக்கம்!

சென்னை, பிப். 13-

வார இறுதி நாட்களை முன்னிட்டு தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் மூலம் சிறப்பு பேருந்துகள் இயக்கப்படும் என அரசு விரைவுப் போக்குவரத்துக் கழக மேலாண் இயக்குநர் தெரிவித்துள்ளார்.

14/02/2025 (வெள்ளிக்கிழமை) 15/02/2025 (சனிக்கிழமை), 16/02/2025 (ஞாயிறு) வார விடுமுறை நாட்களை முன்னிட்டு சென்னையிலிருந்தும் இதர இடங்களுக்கும் மற்றும் பிற இடங்களிலிருந்தும் கூடுதலான பயணிகள் தமிழகம் முழுவதும் பயணம் மேற்கொள்வார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.

இதனை கருத்தில் கொண்டு தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகங்கள் தினசரி இயக்கப்படும் பேருந்துகளுடன் கூடுதலாக சிறப்பு பேருந்துகளை இயக்க திட்டமிடப்பட்டு ள்ளது.

சென்னை கிளாம்பா க்கத்திலிருந்து திருவண்ணாமலை, திருச்சி, கும்பகோணம், மதுரை, திருநெல்வேலி, நாகர்கோவில், கன்னியாகுமரி, தூத்துக்குடி, கோயம்புத்தூர், சேலம், ஈரோடு, திருப்பூர் ஆகிய இடங்களுக்கு 14/02/2025 (வெள்ளிக்கிழமை) அன்று 245 பேருந்துகளும், 15/02/2025 (சனிக்கிழமை) 240 பேருந்துகளும் இயக்க திட்டமிடப் பட்டு ள்ளது. சென்னை கோயம்பேட்டிலிருந்து திருவண்ணாமலை, நாகை, வேளாங்கண்ணி, ஒசூர். பெங்களூரு ஆகிய இடங்களுக்கு 14/02/2025 வெள்ளிக் கிழமை அன்று 51 பேருந்துகளும் 15/02/2025 சனிக்கிழமை அன்று 51 பேருந்துகளும் மேற்கூறிய இடங்களி லிருந்தும் இயக்க திட்டமிடப்பட்டுள்ளது, மேலும் மாதாவரத்திலிருந்து 14/02/2025 அன்று 20 பேருந்துகளும் 15/02/2025 அன்று 20 பேருந்துகளும் சிறப்பு பேருந்துகள் இயக்கப்படுகிறது.

மேலும், ஞாயிறு அன்று சொந்த ஊர்களில் இருந்து சென்னை மற்றும் பெங்களூர் திரும்ப வசதியாக பயணிகளின் தேவைகேற்ப அனைத்து இடங்களிலிருந்தும் சிறப்பு பேருந்துகள் இயக்கிட திட்டமிடப்ப ட்டுள்ளது.

இந்நிலையில், இந்த வார இறுதியில் வெள்ளிக்கிழமை அன்று 6,332 பயணிகளும் சனிக்கிழமை 2,912 பயணிகளும் மற்றும் ஞாயிறு அன்று 6,792 பயணிகளும் பயணம் மேற்கொள்ள முன்பதிவு செய்துள்ளனர். இந்த எண்ணிக்கை மேலும் அதிகரிக்க வாய்ப்பு உள்ளதால் தொலைதூர பயணம் மேற்கொள்ள இருக்கும் பயணிகள் கூட்ட நெரிசலை தவிர்க்கும் பொருட்டு தங்களது பயணத்திற்கு www.tnstc.in மற்றும் Mobile App மூலம் முன்பதிவு செய்து பயணிக்க கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.



தஞ்சை தேசிய உணவு பதனிடும் தொழில்நுட்ப கழகத்திற்கு கூடுதல் நிதி ஒதுக்கக்கோரி புதுடெல்லியில் ஒன்றிய உணவு பதப்படுத்துதல் தொழில்கள் துறை அமைச்சர் சிராக் பாஸ்வானை நேரில் சந்தித்து தஞ்சை நாடாளுமன்ற உறுப்பினர் ச.முரசொலி எம்.பி கோரிக்கை மனு அளித்தார்.


